20th December 1956] [Sri P. Ramamurthi]

Compensation-ஐ பெற்றுக்கொண்டு கஷ்டப்பட முடியாது. ஆனால் 100 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர், ஒருவிதமான நஷ்ட ஈடும் பெற்றுக் கொள்ளாமலே கொஞ்சம் நிலத்தை சர்க்காருக்கு கொடுத்தால் அவர் பிரமாதமாக கஷ்டப்படப்போவதில்லை. நில ஆர்ஜித விஷயத்திலும், நஷ்ட ஈடு விஷயத்திலும் சர்க்கார் இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கை நடத்துவதற்கு வேறு வழியில்லாமல் இருக்கும் ஏழை மக்களிடமிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்ய சர்க்கார் முயற்சிக்க கூடாது. இது விஷயமாக நமது சர்க்கார், அதிகாரிகளுக்கும் ஒரு **directive** அனுப்ப வேண்டும். சர்க்கார் அதிகாரிகள் சட்டத்தில் உள்ள வாசகத்தைதான் பார்ப்பார்கள். சட்டத்தின் நோக்கம் என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆகவே சாத்தியமான வரையில் வேறு வழியில்லாமல் இருக்கக் கூடிய விவசாயிகளிடமிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்யக்கூடாது. விவசாயத்துறையில் ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தி துரிதமான முன்னேற்றம் அடையச் செய்வதற்கு இந்த சட்டம் உபயோகப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே எதிர்க் கட்சி தலைவர் பத்து ஏக்கருக்குட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களை சிறிய விவசாயிகள் என்று கருதுகிறார்கள் என்று நம்புகிறேன். சர்க்காருக்கு மாதிரிப் பண்ணைகள் நிறுவத்தான் நிலம் வேண்டுமென்று முன்பே சொன்னேன். குறைந்தது 25 ஏக்கர் நிலம் வேண்டும். 2 அல்லது 3 ஏக்கர்கள் நிலம் எங்களுக்கு பயன்படாது. யாரையாவது கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எடுத்துக் கொண்டாலும்கூட அந்த நிலம் பிரயோசனப்படாது. 100 ஏக்கர் வரையிலும் நிலம் வைத்திருப்பவர்களே இதுவரையிலும் நிலத்தைக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். 500 ஏக்கரா வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். 600 ஏக்கரா வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத்தான் இருபது ஏக்கரா கொடுங்கள் என்று கேட்கிறோம். அதைக் கொடுப்பதற்கு அழும்பு பிடிக்கிறார்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கிற ஏழைகளிடமிருந்து நிர்ப்பந்தமாக எடுத்துச் கொள்வதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் பயம் கொள்ள வேண்டாமென்று சொல்லிகொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER—*cont.*

(1) MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following message, dated 19th December 1956, received from the Governor of Madras :—

"In pursuance of clause (1) of Article 207, read with sub-clause (*a*) of clause (1) of Article 199 of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Inams (Assessment) Bill, 1956."